
## திராவிடத்தால் வாழ்கிறோம்

789

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

### காவிச்சாயம் வெளுத்துவிட்டது!

ஏழை, எளிய மக்களைக் கல்வியில் இருந்து வெளியேற்றும் வகையில், வடிவமைக்கப்பட்டுள்ள புதிய கல்விக்கொள்கைக்கு எதிராக, ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் ஓரணியில் நிற்கும்போது, தமிழக பா.ஜ.க. மட்டும் புதிய கல்விக்கொள்கையை ஆதரித்து, பரப்புரை செய்து வருகிறது. தப்பித்தவறியும்கூட புதிய கல்விக்கொள்கையில் என்னதான் நன்மை இருக்கிறது என்றோ, தமிழ்நாடு ஏற்கெனவே பின்பற்றிக் கொண்டிருக்கும் கல்விக்கொள்கையில் என்ன பாதகம் இருக்கிறது என்றோ எங்கும் பேசுவதில்லை. பா.ஜ.க. தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தால், தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் நிறுத்தப்படும் என்றும் இக்கூட்டங்களில் பேசுகிறார்கள்.

ஏற்கெனவே, பா.ஜ.க. பல மாநிலங்களில் ஆட்சியில் இருக்கிறது. அங்கெல்லாம் தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரத்தை நிறுத்திவிட்டார்களா? என்ற கேள்வி இயல்பாக எழுகிறது. உத்தரப் பிரதேசத்தில் 2014-ஆம் ஆண்டில் 1,62,228 அரசுப் பள்ளிகள் இருந்தன. ஆனால், இப்போது இருப்பதோ 1,37,102 அரசுப் பள்ளிகள் மட்டுமே. அதாவது, 10 ஆண்டுகளில் 25,126 அரசுப் பள்ளிகளைக் குறைத்திருக்கிறார்கள். ஆனால், தனியார் பள்ளிகளின் எண்ணிக்கையை 77,330-இல் இருந்து 96,635-ஆக உயர்த்தி இருக்கிறார்கள். குஜராத், உத்தராகண்ட், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா எனப் பல மாநிலங்களிலும் இதுதான் நிலைமை.

ஒட்டுமொத்தமாக நாடு முழுக்கப் பார்த்தால், 2014-ஆம் ஆண்டில் 11 லட்சத்து 7 ஆயிரத்து 101-ஆக இருந்த அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை 2024-ஆம் ஆண்டில் 10 லட்சத்து 17 ஆயிரத்து 660-ஆக குறைக்கப்பட்டுள்ளது. ஆனால், தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை 2 லட்சத்து 88 ஆயிரத்து 164-இல் இருந்து 3 லட்சத்து 31 ஆயிரத்து 108-ஆக உயர்ந்துள்ளது. அதேசமயம், தமிழ்நாட்டிலோ அ.தி.மு.க. ஆட்சியின் இறுதி ஆண்டான 2020-21-இல் 37,589-ஆக இருந்த அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை, அடுத்த 3 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசால் 37,672-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தத் தரவுகள் யாவும் ஒன்றிய கல்வித்துறை இணையமைச்சர் ஜெயந்த் சவுத்ரி நாடாளுமன்றத்தில் அளித்தவைதான். இவர்கள் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தால், தனியார் பள்ளிகளின் அங்கீகாரத்தை நிறுத்திவிடுவார்கள் என்பது, எத்தனை அபத்தமான பேச்சு!

### ஃப்ளாஷ்பேக்



#### தலைவரின் மகிழ்ச்சியும் எங்கள் உற்சாகமும்...



கே.மாதையன்

1995-ஆம் ஆண்டு, சேலம் மாநகருக்கு வருகை தந்த தலைவர் கலைஞர், மறைந்த கழக முன்னோடி பெரியவர் ஜி.பி.சோமசுந்தரம் அவர்களின் சிலையைத் திறந்து வைத்தார். கேசில் ஓட்டலில் தங்கியிருந்த தலைவரைச் சந்திப்பதற்கு, அண்ணன் வீரபாண்டியார் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

தலைவரைச் சந்தித்து, அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். நான் தேர்தல் நிதி அளித்துவிட்டு புறப்படுகையில், தலைவர் அவர்கள் “பணம் கொடுத்தவுடன் புறப்படுகிறாயே, உன் பெயரைச் சொல்லிவிட்டு போய்யா, முரசொலியில் போட வேண்டும்” என்று கூறிக் கலகலப்பூட்டினார். தலைவர் மகிழ்ச்சியாகவும், நாங்கள் உற்சாகத்துடனும் திரும்பிய அந்த நாளை மறக்க முடியாது. அப்போது நான் கொங்கணாபுரம் ஒன்றியம், மணமேடு கிளைக் கழகச் செயலாளராக இருந்தேன்.

**– கே.மாதையன், ஒன்றியக் கழக அவைத்தலைவர், கொங்கணாபுரம், சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

### நம் வரலாறு — கலைஞர் நிகழ்த்திய சாதனை!

நம் வரலாறு

1998-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்த கலைஞர், சென்னை, தரமணியில் 7.5 ஏக்கர் பரப்பளவில் ‘எல்காட்’ நிறுவனத்துடன் இணைந்து ‘மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா’ அமைக்கப்படும் என அறிவித்தார். அவரது முயற்சியில் ரூ.338 கோடி மதிப்பில் கட்டப்பட்ட ‘டைடல் பார்க்’ 2000-வது ஆண்டில் திறப்பு விழா கண்டது. அன்றைய சூழலில் உலகின் மிகப்பெரிய மென்பொருள் பூங்காக்களில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது டைடல் பார்க்.

## எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்**

55

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம், இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

## வகுப்புரிமையை எதிர்த்த திரு.வி.க.

‘திரு.வி.க.’ என்று அழைக்கப்படும் திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார் தந்தை பெரியாரின் சமகாலத்தவர். பல நூல்களை எழுதிய தமிழறிஞர். சிறந்த மேடைப் பேச்சாளர். இவரது தமிழ்நடையின் காரணமாக இவர் ‘தமிழ்த்தென்றல்’ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். சுதந்திரப் போராட்ட வீரர், எழுத்தாளர், இதழாளர், பேச்சாளர் என பல்துறைகளிலும் வித்தகராய்த் திகழ்ந்தவர். தந்தை பெரியாரின் நெருங்கிய நண்பர்களில் ஒருவர். காங்கிரஸ் கட்சியிலும், சென்னை மாகாண சங்கத்திலும் தந்தை பெரியாரும் திரு.வி.க.வும் ஒன்றாக இணைந்து பணியாற்றியுள்ளனர்.

சென்னை மாகாண அரசியலில் பார்ப்பனரல்லாதவர்கள், ‘தென்னிந்திய நல உரிமைச்சங்கம்’, ‘நீதிக்கட்சி’ என்ற பெயர்கள் பெரும்புயலென அலை அலையாகக் கிளம்பி வந்தபோது, அதை எதிர்கொள்ள காங்கிரஸ் பார்ப்பனரல்லாத தலைவர்களையே பயன்படுத்திக்கொண்டது. அதில் முக்கிய மானவர்கள் தந்தை பெரியார், திரு.வி.க., டாக்டர் வரதராஜலு நாயுடு ஆகிய மூவர். இதுகுறித்துக் கூறுகையில், வண்டிக்கு முன்பாரம் அதிகமானால் பின்புறம் கற்களைத் தூக்கி வைப்பது போல், எங்களை காங்கிரஸ் பார்ப்பனர்கள் உபயோகித்துக் கொண்டனர் என்பார் தந்தை பெரியார். திரு.வி.க. காங்கிரஸ் வண்டிக்குப் பாரத்தைச் சமநிலைப்படுத்தும் பின்புறக் கல்லாக மட்டும் இல்லை. காங்கிரஸின் முன்னத்தி ஏராகவும் இருந்தார்.

காங்கிரஸ் கட்சியின் பார்ப்பனத் தன்மையை அம்பலப்படுத்தி, தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்து, தமிழ்நாடு முழுவதிலும் சுற்றிச்சுழன்றபோது அதை திரு.வி.க. எதிர்த்தார். நீதிக்கட்சியையும் அவர் எதிர்த்தார். இதுகுறித்து, திரு.வி.க. பின்வருமாறு எழுதுகிறார்:

“1917-ஆம் ஆண்டை நான் என்றும் மறவேன். அவ்வாண்டின் பிற்பகுதி என் வாழ்க்கையில் ஒரு பெரும் மாறுதலை நிகழ்த்தியது. பார்ப்பனரல்லாதார் நலவுரிமைச் சங்கத்தின் சார்பாக மூன்று அறிக்கைகள் வெளியாயின. ஆங்கில ஜஸ்டிஸையும், தமிழ் திராவிட உரையையும் நான் படிப்பதுண்டு. அவை அதிகார வர்க்கத்தை ஆதரித்து, வகுப்புவாதத்தைப் பெருக்கித் தென்நாட்டில் காங்கிரஸை வீழ்த்துவதில், முனைந்து நிற்பவை என்பது நன்கு விளங்கியது.

திராவிடன், சமயத்தையும் கோயிலையும் பழிக்குந் துறையிலும் இறங்கினர். அதுபற்றி, சென்னையின் பல இடங்களில் மறுப்புக் கூட்டங்கள் கூடின. அவற்றில் யானும் கலந்து கொண்டு ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்கினேன். ஜஸ்டிஸ் கட்சியை வீழ்த்தும் முயற்சி, எனக்கு ஒரு தொண்டாகவும் தோன்றியது.”

நீதிக்கட்சியின் வகுப்புரிமைக் கோரிக்கையை வகுப்புவாதம் என்று குறிப்பிட்ட திரு.வி.க. அதைக் கடுமையாக எதிர்த்து வந்தார். வகுப்புரிமைக் கோரிக்கையை எதிர்ப்பவனே உண்மையான தேசபக்தன் என்பது திரு.வி.க.-வின் பார்வை. வகுப்புரிமைக் கோரிக்கை, நீதிக்கட்சி, அதன் தலைவர்களை எதிர்ப்பது குறித்து, திரு.வி.க. பின்வருமாறு தனது ‘வாழ்க்கைக் குறிப்புகள்’ நூலில் குறிப்பிடுகிறார்:

“தேசபக்தன் வகுப்புவாதக் கொள்கையைத் தேய்த்தல் வேண்டுமென்ற நோக்கமுடன் தோன்றியவன். ‘திராவிடன்’ அவ்வாதத்தை வளர்த்தல் வேண்டுமென்ற நோக்குடன் தோன்றியவன். இரண்டுக்கும் இடையில் வாதப் போர் நிகழ்தல் இயல்பன்றோ - பெரும் போர் நிகழும். வகுப்புவாதத்தால் விளைந்த தீமைகளை, ‘தேசபக்தன்’ எடுத்துக் காட்டுவான். நலங்களைத் ‘திராவிடன்’ எடுத்துக்காட்டுவான்.

தேசபக்தன் தோன்றியிராவிட்டால், வகுப்புவாதம் கிளைத்து ஓங்கியிருக்கும், வகுப்புவாதக் கட்சியின் பல், தேசபக்தனால் பிடுங்கப்பட்டது. அக்கட்சியின் வேகம் ஒடுங்கியது. அது வறுத்த நெல்லாயிற்று, பல் விழுந்த பாம்பாயிற்று. சுயமரியாதை இயக்கம் வீறிட்டெழுந்தபோது, அதன் பொருந்தா பகுதியை யான் எதிர்த்தேன். உரமாக எதிர்த்தேன். மிக உரமாக எதிர்த்தேன்.”

நீதிக்கட்சிக் கூட்டங்கள் நடக்குமிடத்திற்கு நேரடியாகச் சென்று, அங்கு சொற்பொழிவாற்றும் நீதிக்கட்சித் தலைவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடும் பழக்கமும் திரு.வி.க.வுக்கு உண்டு. டி.எம்.நாயர் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் திரு.வி.க. நடத்திய வாக்குவாதத்தை அவரே பின்வருமாறு எழுதுகிறார்:

“சென்னை டவுன் ஹாலில் ஜஸ்டிஸ் கட்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் டாக்டர் டி.எம். நாயர் பேசினார். பார்வையாளராக அக்கூட்டத்திற்குச் சென்றிருந்த, யான் கீழ்க்கண்ட கேள்வியை எழுதிக் கொடுத்தேன்.

நீங்கள் ஏன் காங்கிரசை விடுத்து, வகுப்பு வாதக் கட்சியில் சேர்ந்தீர்கள்?

வகுப்புவாதத்தால் நாடு சுயராஜ்யம் பெறுமா, அப்படி எங்கேனும் நிகழ்ந்திருக்கிறதா? சரித்திரச் சான்று உண்டா? என்று கேட்டிருந்தேன்.

டாக்டர் டி.எம். நாயர் பதில் அளித்துப் பேசும்போது, “நான் காங்கிரசில் தொண்டு செய்தவனே. அது பார்ப்பனர் உடைமை யாக்கியதை உணர்ந்தேன். காங்கிரசால் தென்நாட்டு பெரு மக்களுக்குத் தீமை விளைதல் கண்டு, அதை விடுத்து, நண்பர் சர் பிட்டி.தியாகராயருடன் கலந்து ஜஸ்டிஸ் கட்சியை அமைக்கலானேன். வகுப்புவாதத்தால் சுயராஜ்யம் வரும் என்று எவரும் கூறார். வகுப்பு வேற்றுமை உணர்வு தடித்து நிற்கும் வரை சுயராஜ்யம் என்பது வெறுங்கனவேயாகும். வகுப்பு வேற்றுமை உணர்வின் தடிப்பை வகுப்புவாதத்தால் போக்கிய பின்னரே, சுயராஜ்யத் தொண்டில் இறங்க வேண்டுமென்பது எனது கருத்து. காலத்துக்கேற்ற தொண்டு செய்வது நல்லது. வகுப்பு வேற்றுமை இல்லாத நாடுகளைப் பற்றிய சரித்திரங்களை இங்கே வளர்த்தல் வேண்டும். இந்தியா ஒரு விபரீத நாடு. பிறப்பில் உயர்வு, தாழ்வு கருதும் நாடு என்றார்.”

டி.எம். நாயர் பதிலைக் கேட்டதும் திரு.வி.க., “வகுப்புவாத கட்சி, வகுப்புகளின் நினைவையன்றோ உண்டுபண்ணும். அதனால் வகுப்பு வேற்றுமை வளருமா, தேயுமா; உங்கள் கட்சி பார்ப்பனர்களுக்குள் ஒற்றுமையையும் பார்ப்பனரல்லாதாருக்குள் வேற்றுமையையும் வளர்ப்பதாகும்” என்றார்.



ஓவியம் : ரவி பேலட்

‘ஜஸ்டிஸ்’ ஆங்கில இதழும் ‘திராவிடன்’ தமிழ் இதழும் திரு.வி.க.வைக் கண்டித்து எழுதின. பின்னர் திரு.வி.க. ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டங்களுக்கு நேரே போய்க் கேள்வி கேட்பதை நிறுத்திக் கொண்டேன் என்று ஒரு துண்டறிக்கை எழுதி வெளியிட்டார்.

‘நீதிக்கட்சியால் பார்ப்பனர்களுக்குள் ஒற்றுமையும், பார்ப்பனரல்லாதாருக்குள் வேற்றுமையும் வளரும்’ என்பது திரு.வி.க.வின் கணிப்பு. ஆனால், நீதிக்கட்சியால் பார்ப்பனர்களுக்கு அச்சமும் பார்ப்பனரல்லாதாருக்குள் ஒற்றுமையும் வளர்ந்தது.

வகுப்புரிமையை திரு.வி.க. ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை. வகுப்புரிமை என்ற சொல்லைக் கூட அவர் பயன்படுத்தவில்லை. மாறாக வகுப்புவாதம் என்றே அழைத்து வந்தார். ‘நாடு இல்லையேல் வகுப்பு ஏது? பிற ஏது? சுவரை வைத்தன்றோ சித்திரம் எழுத வேண்டும். வகுப்பு - வகுப்பு என்று எத்துனை நாள் அந்நிய ஆட்சி நிழலில் நின்றுகொண்டிருப்பது. வகுப்பு நலன் நாடாது நாட்டு நலன் ஒன்றே நாடி, உழைப்பது போற்றுதற்குரியது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமோ எதுவோ எல்லாம் காங்கிரசுக்குள் முட்டி மோதிக்கொள்ளச் செய்யவேண்டுமே அன்றி, காங்கிரசை விடுத்து அப்பிணக்குகளைப் போக்க மற்ற இடம் என்றால், வினையை விலைக்கு வாங்குவதாக முடியும்’ என்பது திரு.வி.க.வின் கருத்து.

ஆனால், களத்தில் பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதார் இடையேயான வேறுபாட்டில் எழுந்த அனல் கொழுந்து விட்டெரிந்தது. அப்பொறியைத் தணிக்கும் ஒரே மருந்தாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே இருந்தது.

> **களத்தில் பார்ப்பனர்-பார்ப்பனர் அல்லாதார் இடையேயான வேறுபாட்டில் எழுந்த அனல் கொழுந்து விட்டெரிந்தது. அப்பொறியைத் தணிக்கும் ஒரே மருந்தாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே இருந்தது.**

**...குரல் ஒலிக்கும்**

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131